**செ. கு. எண்**:238 **நாள்**:04.07.2012

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 4.7.2012

---

தமிழக அரசு தி.மு.க.வினர் மீது அரசியல் காரணங்களுக்காக நில அபகரிப்பு வழக்குகளை பதிவு செய்கிறது என்றும், எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சிறை நிரப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் தி.மு.க.வால் முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில், இன்று தி.மு.க. வினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் தாலுகா அலுவலகங்கள் முன்பு போராட்டம் மேற்கொண்டனர். இந்த போராட்டத்தில் ஈடுபட்டு சிறை செல்வோர் எத்தனை மாதம் ஆனாலும் ஜாமீன் கேட்கக் கூடாது என்று தி.மு.க. தலைமை ஆணையிட்டிருந்தது.

தி.மு.க. வினர் மீது பொதுமக்களால் கொடுக்கப்பட்ட நில அபகரிப்பு புகார்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கையினை திசை திருப்பி மக்களை ஏமாற்றும் விதமாக தி.மு.க.வால் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. நான் ஏற்கெனவே பலமுறை தெரிவித்தபடி நில அபகரிப்பு புகார்கள் முந்தைய தி.மு.க. ஆட்சியின் போதே பொதுமக்களால் கொடுக்கப்பட்டிருந்தன. எனினும், நிலத்தை அபகரித்தவர்கள் தி.மு.க. வினர் என்பதால், புகார்களின் மீது நடவடிக்கை எதுவும் முந்தைய தி.மு.க. அரசால் எடுக்கப்படவில்லை. எனது தலைமையிலான அரசு அமைக்கப்பட்ட பின், நான் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி முந்தைய தி.மு.க. ஆட்சியில் நில அபகரிப்பு காரணமாக நிலங்களை இழந்தவர்களுக்கு, அவற்றை மீட்டுக் கொடுக்க முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால், நிலங்களை அபகரித்த தி.மு.க. வினர் பாதிக்கப்படுவது இயற்கையே. இதன் காரணமாக, பொது மக்களிடத்தில் தி.மு.க. மீது ஏற்பட்டுள்ள வெறுப்பினை திசை திருப்பவும், நாளும் தி.மு.க. தலைவர் குடும்பத்தினர் மீது சொல்லப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை மறைக்கவும் தி.மு.க. தலைவர் இது போன்ற ஒரு போராட்டத்தை அறிவித்தார்.

இந்த போராட்டத்தில் ஈடுபடுவோரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யலாம் என்று மதுரை உயர்நீதி மன்றக் கிளை கூறியிருந்த போதிலும், அவ்வாறு செய்ய வேண்டாம் என காவல் துறையினருக்கு நான் ஆணையிட்டிருந்தேன். அதே போன்று, மக்களை ஏமாற்றும் விதமாக நடத்தப்பட்ட இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து சிறையில் அடைப்பது அரசுக்கும், காவல் துறைக்கும் ஒரு பயனற்ற பணியாகத் தான் அமையும் என்பதால், இந்த போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவித்துவிடும்படி நான் காவல் துறையினருக்கு உத்தரவிட்டேன். எனது உத்தரவின்படி, இன்றைய போராட்டத்தில் ஈடுபட்ட தி.மு.க.வினர் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**